**மாவத்தகம பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 20 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 07 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மாவத்தகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்களுக்காக கணக்குகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணிகளை துண்டாக்கும் போது பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 22,842,650 பெறுமதியான 17 காணித் துண்டுகளின் பெறுமதி கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய சம்பள மீள் நிரப்பல் வருமானமான ரூபா 11,370,359 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காணப்படும் 06 காணி / கட்டிடங்கள் கூறுகளின் பெறுமதி மீள்கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையின் களஞ்சிய பெறுவனவு பத்திரத்தின் மூலம் பொருட்கள் மொத்தமாக கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எவ்வித கணக்கு பதிவொன்றோ வைக்கப்படாதிருந்ததுடன் அதற்காக பணம் கொடுப்பனவு செய்யும் போது மாத்திரம் களஞ்சிய முற்பணக் கணக்கு வரவு வைக்கப்படுகின்றது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,218,577 பெறுமதியான கடன்கொடுத்தோர் மீதிகள் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஊ) பிரதேச சபைகளை பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 3,000,000 ஆன மானியத் தொகை மீண்டெழும் வருமானத்தின் கீழும் அதன் செலவினம் மீண்டெழும் செலவினம் உட்பட மூலதனச் செலவினத்தின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதிகளின் கீழ் 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் இறுதி மீதிகள் மற்றம் அதற்கு அண்மித்த குறிப்பிட்ட பதிவேடுகளின் மீதிகளுக்கிடையே ரூபா 6,088,861 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 42,292,224 ஆக இருந்ததுடன், அவற்றில் ரூபா 2,298,068 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

(ii) பெற வேண்டிய கணக்கு மீதிகளில் 12 ஆண்டுகள் அளவில் இருந்து வரும் அறவிடப்படாத காணப்படும் ரூபா 1,149,245 ஆன 03 மீதிகள் காணப்பட்டன.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 38,686,509 ஆக இருந்ததுடன், அவற்றில் ரூபா 5,003,276 தொகை 03 வருடங்களக்கு மேற்பட்ட காலம் முதல் இருந்து வரும் தீர்வு செய்யப்படாத மீதிகளாக காணப்பட்டன.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 188,483,608 பெறுமதியான 15 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு, மெய்மையாய்வு சபை அறிக்கை உரிய அட்டவணைகள் மற்றும் நிலுவை வருமானங்களுக்குரிய பி.ச 07 அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் அக்கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 150(i) மற்றும் 152(i) ஆம் பிரிவுகள் | நிர்மாணங்கள் மற்றும் வர்த்தக வியாபாரங்கள் தொடர்பான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 59 மற்றும் 67 ஆம் விதிகள் | மீளாய்வாண்டிற்காக சபையினால் வியாபார வரிகளை அறவிடுதல் மற்றும் வியாபார அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குரிய மேற்படி விதிகளின் பிரகாரம் கணிப்பீடொன்று நடாத்தப்பட்டு அவ்வாறான இடங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 396 | சபையின் 7626156 ஆம் இலக்க வங்கிக் கணக்கிற்குரிய 2015 திசெம்பர் மாதத்தின் வங்கிக் கணக்கின் பிரகாரம் வழங்கப்பட்ட போதிலும் 06 மாதங்களை கடந்த ரூபா 187,622 தொகையான 20 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 242,679 ஆன வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 715(2)அ | சபைக்குச் சொந்தமான கட்டிடமொன்று உடைத்து அகற்றப்பட்ட பல்வேறு பொருட்கள் சபை வளவில் ஆங்காங்கே முறையற்ற விதத்தில் குவித்து வைக்கப்பட்டு இயற்கை தாக்கங்களுக்கு உட்பட்டு காணப்பட்டு வந்தன. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,358,324 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 2,865,594 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,492,730 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 6,552,741 ஆன மூலதன உதவி மற்றும் ரூபா 10,944,580 ஆன மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 33,515 ஆன பற்றாக்குறையாக மாறியிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | வருமானம் 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | செலவினம் 2015 | 2014 | முரண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 11,348 | 9,637 | 1,711 | தனிப்பட்ட வேதனம் | 65,931 | 45,448 | 20,483 |
| (ii) | ஏனையவை | 76,580 | 61,619 | 14,961 | ஏனையவை | 17,638 | 22,943 | (5,305) |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உப மொத்தம் | 87,928 | 71,256 | 16,672 | உப மொத்தம் | 83,569 | 68,391 | 15,178 |
| (iii) | மூலதன வருமானம் | 6,552 | 16,339 | (9,787) | மூலதன செலவினம் | 10,945 | 19,449 | (8,504) |
| | | -------------- | -------------- | ----------------- | | -------------- | -------------- | --------------- |
| | மொத்தம் | 94,480 | 87,595 | 6,885 | மொத்தம் | 94,514 | 87,840 | 6,674 |
| | | ====== | ====== | ===== | | ====== | ===== | ===== |
| | செயற்பாட்டு விளைவு | 4,358 | 2,865 | 1,493 | மிகை | (34) | (245) | 211 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமான ரூபா 87,926,993 தொகையில் 79 சதவீதமானவை அதாவது ரூபா 69,046,783 தொகையும் சபையினால் உழைத்த வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற தன்மையுள்ள பெறுவனவுகளினை அடங்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 6,552,741 ஆன மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மூலம் வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைக்கப்பெற்ற பணத்தினை அடங்கியுள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 83,568,669 தொகையில் 78 சதவீதமான அதாவது ரூபா 65,930,830 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 61 சதவீதமான ரூபா 40,035,077 ஆன சம்பள மீளளிப்பாக உள்ளுராட்சி மன்ற ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மூலதனச் செலவினமான ரூபா 10,944,580 தொகையில் 43 சதவீதமான அதாவது ரூபா 4,709,334 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய மீதி 57 சதவீதம் அதாவது ரூபா 6,235,246 தொகை கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மூலம் வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களாகும்.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீதவரியும் வரியும் | 1,834 | 1,606 | 4,633 | 1,834 | 1,087 | 4,333 |
| (ii) | குத்தகை வாடகை | 8,921 | 5,348 | 2,103 | 9,768 | 2,057 | 2,523 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,205 | 1,225 | 70 | 1,205 | 1,126 | 73 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (iv) ஏனைய வருமானம் | 112,840 | 79,749 | 18,888 | 72,110 | 42,586 | 15,602 |
| | ------------ | ------------ | ------------ | -------------- | ------------ | --------------- |
| மொத்தம் | 124,800 | 87,928 | 25,694 | 84,917 | 46,856 | 22,531 |
| | ====== | ====== | ======= | ======= | ======= | ======== |

## 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | | | வருமான சேகரிப்பு | | | நிலுவை மீதி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் | 2015/12/31 இல் நிலுவை கணிப்பீட்டின் பிரகாரம் | 2015/12/31 உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா.000 | ரூபா000 | ரூபா. 000 | ரூபா000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரியும் வரியும் | 4,333,803 | 1,834,000 | 6,167,803 | 1,094,691 | 368,000 | 1,462,691 | 3,239,112 | 1,466,000 | 4,705,112 | 4,633,137 |
| வாடகை | 2,532,098 | 8,921,000 | 11,453,098 | 428,682 | 3,726,189 | 4,154,871 | 2,103,416 | 5,194,811 | 7,298,227 | 2,103,416 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 73,400 | 1,205,000 | 1,278,400 | 3,000 | 1,221,670 | 1,224,670 | 70,400 | - | 70,400 | 70,400 |
| சேவைக்கான கட்டணங்கள் | 54,900 | 3,114,825 | 3,169,725 | 34,500 | 3,114,825 | 3,149,325 | 20,400 | - | 20,400 | - |
| பிடி விராந்தும் தண்டப்பணமும் | 504,500 | 3,029,000 | 3,533,500 | 504,500 | 549,167 | 1,053,667 | - | 2,479,833 | 2,479,833 | -531,833 |
| ஏனைய வருமானம் | 8,843,516 | 2,130,500 | 10,974,016 | 8,500,000 | 18,117,536 | 26,617,536 | 343,516 | - | 343,516 | 12,321,997 |
| வருமான நன்கொடை | 6,597,311 | 81,360,982 | 87,958,293 | 6,387,311 | 42,520,411 | 48,907,722 | 210,000 | 38,840,571 | 39,050,571 | 6,034,979 |

சபையின் வருமான பதிவேடுகளை பராமரித்துச் செல்வதில் குறைபாடுகள் காரணமாக கணிப்பிடலின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதிகள் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் மீதிகளுடன் இணங்கவில்லை.

## 2.3.3 வீத வரி

வீத வரியின் கீழ் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,834,000 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டு காணப்பட்ட போதிலும், இதில் ரூபா 368,000 அதாவது 20 சதவீதமே அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே ஆரம்ப நிலுவை ரூபா 4,333 ஆக இருந்ததுடன் அதிலிருந்து எவ்வித தொகையும் ஆண்டினுள் அறவிடப்படாதிருந்ததால் ஆண்டின் ஆரம்ப நிலுவை ஆண்டின் இறுதியிலும் காணப்பட்டது.

## 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

சபை அதிகாரப் பிரதேசத்தில் 09 முச்சக்கர வண்டி நிறுத்துமிடங்கள் காணப்பட்டதுடன் 2015 திசெம்பர் 30 ஆந் திகதி வெளிக்கள பரிசோதனையின் போது பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் கணக்காய்வு திகதி வரை அந்நிறுத்துமிடங்களில் 70 முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. எனினும் சபை முச்சக்கர வண்டிகளுக்காக கட்டணங்களை அறவிட்டு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு விதிகள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடுவதன் மூலம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

மீளாய்வாண்டின் இறுதியில் 10 நிரந்தரமான ஊழியர்களுக்கும் நாளாந்தம் சம்பளம் பெறும் 15 தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த ஊழியர் கடன் 01 ஆண்டு முதல் 06 ஆண்டுகள் வரையான வீச்சில் அறவிடப்படாமல் இருந்தது.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 18 சுகாதார தொழிலாளர்களின் சேவையில் ஈடுபட்டுள்ளதுடன் அதில் 08 பேரின் வருகை பலவீனமான நிலைமையில் காணப்பட்டதன் காரணமாக அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருட்களை வெளியேற்றுதல், அகற்றுதல் நகரில் வடிகாண் மற்றும் குறுக்கு வீதிகள் பராமரிப்பு நடவடிக்கைகள், சந்தை வளவினை சுத்திகரித்தல் முறைப்படி மேற்கொள்ளப்படாதிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் சபையின் 08 சுகாதார தொழிலாளர்கள் 2015 ஆம் ஆண்டில் 411 சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

(ஆ) சபையின் 69 காணித்துண்டுகளுடன் கூடிய வெலிகும்புற தல்கொல்ல வத்த காணி பிரித்தல் திட்டம் 2015 யூன் 26 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் பொதுபகுதிக்காக 89.8 பேர்ச் உடன் கூடிய 46 ஆம் இலக்க துண்டு ஒதுக்கப்பட்டிந்தது. விளைச்சலுடன்கூடிய 20 தென்னை மரங்கள் அளவில் குறித்த பகுதியில் காணப்பட்டதுடன், விளைச்சலில் சேகரிக்கப்படும் வருமானத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக்காணிக்காக மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் வசதிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் வருடக் கணக்காக செயலற்ற நிலைமையில் காண்படும் 05 கணக்குகளுக்குரிய ரூபா 148,374 ஆன மீதி காணப்பட்டது.

(ஈ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 11 தொலைத்தொடர்பு கோபுரங்கள் காணப்பட்ட போதிலும், அவை இனங்காணப்பட்டு பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் தொலைத்தொடர்பு கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு இணக்கச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சபையின் இணக்கச் சான்றிதழ்கள் வழங்குவது தொடர்பாக பரிசோதனையின் போது எவ்வித தொடர்பாடல் கோபுரமொன்றுக்கேனும் இணக்கச் சான்றிதழ் வருடக் கணக்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டிற்காக ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக 33 சொத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 12 சொத்துக்கள் மாத்திரம் குத்தகைக்கு வழங்க கூடியதாக இருந்தது. வழங்க முடியாதிருந்த சொத்துக்கள் 2014 ஆம் ஆண்டிலிருந்து குத்தகைக்கு வழங்கப்படாதிருந்ததுடன் அன்றிலிருந்து 2015 திசெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டோ வருமானத்தை உழைக்கவோ நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு குத்தகைக்கு வழங்குவதற்கு முடியாதிருந்த 18 சொத்துக்களில் குறைந்த கேள்வியின் பெறுமதி ரூபா 410,393 ஆக இருந்தது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 4.2 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சகைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் நீண்டகாலமாக விளைவற்ற வகையில் காணப்பட்டமையால் சிதைவடைந்து காணப்பட்டு வந்தது.

(ஆ) சபை வளவில் டெயோட்டா வகை பிணியாளர் வண்டி, உற்பத்தி வருடம், சபைக்கு கிடைக்கப்பெற்ற திகதி உட்பட தகவல்கள் எதுவும் சபையிடம் இல்லாமல் இருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2015 திசெம்பர் மாதம் வரையிலும் பதிவுசெய்யப்படாமல் சேவையில் ஈடுபடுத்தாமலும் சிதைவடைந்து காணப்பட்டு வந்தது.

**4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

2014 ஆம் ஆண்டின் போது உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் சபைக்கு கிடைத்த 506 GI குழாய்களில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 550,000 பெறுமதியான 275 குழாய்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

05 வருமான விடயங்களில் 24 சதவீதம் முதல் 65 சதவீதம் வரை பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான நிலைமைகளுக்கிடையே ரூபா 47,298,825 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.5 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

மீளாய்வாண்டில் சபையினால் 12 முகாமைத்துவ கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் எதுவும் கூட்டப்பட்டிருக்கவில்லை.

**05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்